1992 மார்ச் 23]

303—

ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக்குதல்:

*410 திரு. ம. தனபால்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மறைமலைநகர் நகரியத்தில் ஆரம்பச் சுகாதார நிலையமாக செயல்படும் மருத்துவமனையை 24 மணி நேரமும் செயல்படும் மருத்துவமனையாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மறைமலை நகரில் ஆரம்பச் சுகாதார நிலையமாக செயல்பட்டுவரும் மருத்துவமனையை 24 மணி நேரமும் செயல்படும் மருத்துவமனையாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

திரு. ம. தனபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைமலைநகர் நகரியம் என்று சொல்வது, மிகவும் அபிவிருத்தியான ஒரு பகுதி. அங்கே என். எச்.—1, என். எச்.-2, என். எச்.-3 என்ற 3 வகையான குடியிருப்புகளும், கிட்டத்தட்ட 60, 70 கிராமங்களுக்கு மேலாக சுற்றுவட்டாரத்திலும், அதேபோன்று, அந்தப் பகுதியில் பல தொழிற்துறைகள், தொழில் நிறுவனங்கள் உள்ளதால், அந்தப் பகுதியை ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை உயர்த்தித் தர அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9.50

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொல்லிய அனைத்துக் கருத்துக்களும் நியாயமானவை என்றாலும்கூட, அரசினுடைய நிதிப் பற்றாக்குறை காரணமாக அதையெல்லாம் மேற்கொள்ள முடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே, நிதிநிலைமை சரியான பிறகு இதைப்பற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 304. திரு. ஜி. பழனிசாமி. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.